**பதுளை பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 27 ஆந் திகதியன்றும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூன் 30 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதுளை பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

இறுதி இருப்பைக் கணிப்பிட்டு கணக்கீடு செய்கையில் பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 25,364 இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக சபையின் ஊழியர்களிற்காகச் செலுத்தியிருந்த கட்டிட விண்ணப்பங்களை பரிசோதித்தல் படி ரூபா 6,600 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்து கிடைத்திருந்த பகிர்ந்தளிக்கப்படாத ரூபா 5,520 பெறுமதியான குப்பைத் தொட்டிகள் இறுதி இருப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 10,917,341 ஆகக் காணப்பட்டதுடன், செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,365,093 ஆகக் காணப்பட்டது.

#### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவு | சபை அதிகாரப்பிரதேசத்தில் தாபிக்கப்பட் டுள்ள 20 அறைகளைக் கொண்ட சுற்றுலா விடுதியிலிருந்து இடைக்கால யாப்பியல் ஏற்பாட்டின் கீழ் வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) ஒழுங்குவிதிகள் கோவை | |
| (i) 155 ஆவது விதி | PS 10 படிவத்தின் பிரகாரம் காசுப் புத்தகத்தினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 164 ஆவது விதி | கணக்கு ஆவணங்கள் செயலாளரினால் அல்லது அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தரினால் நாளாந்தம் பரிசோதிக்கப்பட்டு சரியானதன்மையினை உறுதிப்படுத்தி சுருக்க ஒப்பம் இடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 180 ஆவது விதி மற்றும் நிதிப்பிரமாணம் 885 மற்றும் ஊவா மாகாண பிரதம செயலாளரின் 2010 மார்ச் 24 ஆந் திகதிய 2/மு/1 ஆம் இலக்க கடிதம் | சபையின் பணம், ஆதனங்கள், களஞ்சியம் போன்றவற்றுக்குப் பொறுப்பாகவுள்ள, காசோலைகளில் கையொப்பமிடுகின்ற, உறுதிசீட்டுக்களை சான்றுறுதிப்படுத்துகின்ற அனைத்து உத்தியோகத்தர்களும் கடமைக்குரிய பிணை வைப்புக்களை வைப்பிலிட்டிருக்கவில்லை. |
| (ஈ) இலங்கை சநனாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்த ரூபா 16,956 பெறுமதியான 07 காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 02 ஆண்டுகளைத் தாண்டிய ரூபா 29,950 கூட்டுத்தொகையான 13 வைப்புக்கள் கைதவிர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிகள் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | இடமாற்றம் பெற்றுச்சென்ற, ஓய்வுபெற்ற, பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் தகவல்கள் பெறப்பட முடியாதுள்ள 12 உத்தியோகத் தர்கள்/ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 24,926 கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) 2014 ஒக்தோபர் 25 ஆந் திகதிய 5/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 2016 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் இரண்டு சுகாதார தொழிலாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு மாதாந்தம் ரூபா 15,000 படி |

செலுத்தி நூலக வேலைகள் மற்றும் வரவேற்றல் பிரிவின் வேலைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,343,789 ஆகக் காணப்பட்டதுடன், அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,062,820 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானச் சேகரிப்புச் செயலாற்றல்

முன்னைய ஆண்டு தொடர்பில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச சபை நிதியத்திற்குப் பெறப்பட வேண்டியிருந்த நிலுவை வருமானம் ரூபா 681,557 ஆகக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டிற்கான ரூபா 7,857,686 மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 82 சதவீதம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்டது.

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபை பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும் ரூபா 7,681,557 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

(அ) 2011 ஆம் ஆண்டில் கிராம எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதுளை பிரதேச செயலகத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு சபையின் கீழுள்ள சுகாதார சிகிச்சை நிலையங்களிற்கு பகிர்ந்தளிப்பதற்காக 2013 ஆம் ஆண்டில் சபைக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்த உபகரணங்களில் ஏறத்தாழ 75 சதவீதமான உபகரணங்கள் சபையில் வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) மக்களின் பயன்பாட்டிற்காக சபை வளவில் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியினை பொருத்துதல் போதுமானதாக காணப்பட்ட போதிலும், சபை வளவில் 06 தொலைக்காட்சிப் பெட்டிகள் பொருத்தப்பட்டிருந்தன.

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

(அ) 1993 செப்தெம்பர் 03 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வுபெறச் செய்யப்பட்ட உள்ளூராட்சி ஊழியர்களின் ஓய்வூதியத்திற்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 574,858 தொகையினை அனுப்பிவைப்பதற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த கொடிக் கம்பங்களில் ரூபா 62,000 பெறுமதியான 56 கொடிக் கம்பங்கள் 2014 ஆம் ஆண்டில் உப தவிசாளர் உள்ளிட்ட சபையின் 04 உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அவை மீண்டும் கையளிக்கப்படாதிருந்ததுடன், மேற்படி உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்டிருந்த கொடிக் கம்பங்களிற்கு மேலதிகமாக ரூபா 55,357 பெறுமதியான 50 கொடிக் கம்பங்கள் பற்றாக்குறையாகக் காணப்பட்டன.

### 3.3 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

(அ) 2011 ஆம் ஆண்டு முதல் மின்பிறப்பாக்கி, டீசல் நீர் இயந்திரம் மற்றும் கழிவுகளை அரைக்கும் இயந்திரம் என்பன விளைவற்றுக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் ரூபா 2,222,335 செலவிடப்பட்டு அரைவாசி வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்த புதிய சபைக் கட்டிடம் சறிவடைந்து 2014 ஆம் ஆண்டு முதல் இதுவரை பயனற்ற நிலையில் காணப்பட்டது.

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2016 யூன் மாதத்தில் மணல் வழங்குவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனர் ஒருவர் காணப்படுகையில் அவரைக் காட்டிலும் 192 சதவீதம் அதிகமாக விலையினை சமர்ப்பித்திருந்த வழங்குனரிடமிருந்து 03 சந்தர்ப்பங்களில் மணல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 139,000 நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 3.5 ஒப்பந்த நிர்வாகம்

நாவுல்ல பாடசாலை மைதானத்திற்கு அருகாமையிலிருந்து வீதியினை அபிவிருத்தி செய்யும் வேலையின் உடன்படிக்கைக் காலத்தில் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டு முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்ட வேலைகளின் பெறுமதிக்காக உள்ளூராட்சி திணைக்களத்திற்கு சிட்டைகளை சமர்ப்பிப்பதற்கு பிரதேச சபை தவறியிருந்தமை காரணமாக ரூபா 352,338 ஒப்பந்த தாரருக்கு சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீடானது வருமான மற்றும் செலவினக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டில் வருடாந்த கொள்வனவுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) இருப்புக் கட்டுப்பாடு
(இ) வருமானச் சேகரிப்பு
(ஈ) வாகனக் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த நிர்வாகம்